Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 138/2026** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **கணேசன் (சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**25.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 06.12.2025 ம் தேதி நான் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன் அவர்களால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 261/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழான வழக்கு கோப்பினை பார்வையிட்டு தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே எதிரியை தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன்.

2. அன்றைய தினமே ரோந்து பணிக்கு சென்ற சாட்சிகளான தலைமை காவலர்கள் சுசிக்குமார், மாரிமுத்து மற்றும் இவ்வழக்கின் எதிரியை கைது செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் 13.01.2026 ம் தேதியில் இவ்வழக்கில் கைப்பற்றபட்ட 180 மிலி அளவுள்ள EXPRESS BRANDY – 27 பாட்டில்களை உதவி ஆணையர் (Excise Departement, Virudhunagar) அவர்களிடம் ஒப்படைக்க

முநிகா கம்பத்துராஜா என்பவர் வசம்கொடுத்து அனுப்பி வைத்தேன். 23.01.2026 ம் தேதி மேற்படி மதுபாட்டில்கள் ந.க.க.எண். 2/ 20.01.2025 ன்படி அழித்தற்கான சான்றினை பெற்றேன். **(அழித்தல் சான்று அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி கருப்பசாமி மீது பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மதுபாட்டில்களில் மதுபானங்கள் தான் இருந்ததா என்பதை நிரூபணம் செய்ய மேற்படி பாட்டில்களை நான் பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுபானங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் வீடியோ பதிவு எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு இருந்தால் மேற்படி நடவடிக்கைகள் ஆனது வீடியோ பதிவு செய்யப்பட்டு இருக்கும் என்றாலும், சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தில் தான் வீடியோ பதிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரியின் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**